

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஒன்றியம், ஒலியமங்கலம் கிராமத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ சிகிச்சை முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி,நேற்று முன்தினம் (27.06.2023) துவக்கி வைத்தார். உடன் மண்டல இணை இயக்குநர் (கூ.பொ.) மரு.எஸ்.எஸ்.அரசு, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பொது மேலாளர் (ஆவின்) திருமதி.எஸ்.தங்கமணி, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் பேராசிரியர் மற்றும் தலைவர் மரு.பூ.புவராஜன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் திருமதி. சி.சோலையம்மாள் சிவக்குமார் (ஒலியமங்கலம்), முருகேசன் (மேலத்தானியம்), ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி.வி.சிவரஞ்சனி வினோத்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (27.06.2023) கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களைப் போற்றும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "இதழாளர் கலைஞர் என்ற குழுவின் ஆலோசனைக் கூட்டம், இக்குழுவின் தலைவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சருமான மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரும், உறுப்பினர் செயலருமான த.மோகன், உறுப்பினர்கள், இந்து என். ராம், விஜய் சங்கர், பாபு ஜெயக்குமார், கோவி. லெனின், மு. குணசேகரன், செந்தில்வேலன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

# பயிற்சி மையம் - தகவல் மையத்தில் சிகிச்சைப் பிரிவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

கோவை, ஜூன் 29-

கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (27.06.2023) ரூ.1.02 கோடி மதிப்பில் உள்நோயாளிகள் கட்டண சிகிச்சை பிரிவு, ரூ.18 இலட்சம் மதிப்பில் சி.எஸ்.ஆர். நிதி பங்களிப்புடன் புதிய தகவல் மையம், ரூ.15.44 இலட்சம் மதிப்பில் எலிபசை விஷமுறிவு பிளாஸ்மா குருதி மாற்று சிகிச்சைக்கான மாநில பயிற்சி மையம் ஆகியவற்றை திறந்து வைத்து, மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு ரூ.3.37கோடி மதிப்பிலான இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகளை வழங்கி, பாம்புக்கடி நச்சுமுறிவு சிகிச்சைக்கான பயிற்சிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:-

ஹெல்பிங் ஹார்ட்ஸ் தொண்டு நிறுவனம் மற்றும் ப்ரோபல் இன்டஸ்ரிஸ் நிறுவனம் ரூ.18 இலட்சம் மதிப்பில் சி.எஸ்.ஆர் நிதிப்பங்களிப்புடன், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 4 இடங்களில் (HELP DESK) புதிய தகவல் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த தகவல் மையத்தில் உள்ள பணியாளர்கள் சிகிச்சைக்கு வருபவர்கள் எந்த பிரிவுக்கு செல்லவேண்டும், எந்த மருத்துவரை அணுகவேண்டும், ஸ்கேன் செய்யும் இடம், வரவேற்பாளர் பிரிவு, வாகன நிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை வழங்குகின்றனர். சி.எஸ்.ஆர் நிதி பங்களிப்பு அரசு மருத்துவமனையில் தகவல் மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறையாகும்.

### கட்டண சிகிச்சை வார்டு!

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், சேலம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கட்டண சிகிச்சை வார்டு திறந்துவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ரூ.1.02 கோடி மதிப்பில் தனியார் மருத்துவமனைகளில் இருப்பது போன்ற அதிநவீன வசதிகளுடன் கூடிய கட்டண சிகிச்சை வார்டு 26 அறைகளுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வார்டில் உள்ள சூப்பர் டீலக்ஸ் அறை 5 பேர் அமரும் வகையில் சோபா, உடனிருப்பவர் தங்க ஒரு படுக்கை, நோயாளிகளுக்கான உயர்தரமான அதிநவீன படுக்கை, ஒரு தொலைக்காட்சிப்பெட்டி, குளியலறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன், குளிர்சாதன அறையாக உள்ளன. இதே வசதி தனியார் மருத்துவமனையில் இருந்தால் நாளொன்றுக்கான வாடகை ரூ.10,000 முதல் ரூ.15,000வரை கட்டணம் வசூலிப்பார்கள். ஆனால் அரசு மருத்துவமனையில் இந்த அறைகளுக்கு ரூ.3,000 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், டீலக்ஸ் அறைக்கு ரூ.2000, சாதாரண அறைக்கு ரூ.1,200 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கட்டண சிகிச்சை வார்டில் உள்ள அறைகள் மற்ற மாவட்டங்களில் (11 அறைகள்) உள்ளதை விட கோயம்புத்தூர் மாவட்டத்தில் கூடுதலான அறைகள் (26 அறைகள்) உள்ளன.

நாய்கடி மற்றும் பாம்புக்கடி விஷமுறிவு மருந்துகள் அரசு மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் மட்டுமே இருந்தன. இந்த மருந்துகள் அனைத்து இடங்களிலும் கிடைக்கவேண்டும் என மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டில் உள்ள 2286 சுகாதார மையங்கள், மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் இம்மருந்துகள் கட்டாயம் இருப்பு வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மலைக்கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களில் நாய்கடி மற்றும் பாம்புக்கடிக்கு இறப்புகள் இருக்கக்கூடாது, அவர்கள் உடனடியாக காப்பாற்றப்படவேண்டும் என்ற வகையிலும், மருந்துகளை கையாளும் செவிலியர்களுக்கு இன்று பயிற்சிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலை மருத்துவர்கள், செவிலியர்கள், களப்பணியாளர்களுக்கு பாம்பு கடி விஷமுறிவு பயிற்சி முழுமையாக பயனுள்ளதாக இருக்கும். மேலும், எலிக்கொல்லிபசை விஷமுறிவு பிளாஸ்மா குருதி மாற்று சிகிச்சைக்கான மாநில பயிற்சி மையமாக கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

### இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகள்!

கொரோனா தொற்று பேரிடர் காலத்திற்குபிறகு மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன என்று WHO மற்றும் ICMR அறிவித்துள்ளன. அது தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளனர். மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்புகளை உடனுக்குடன் குறைக்க வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள 8713 துணை சுகாதார நிலையங்களிலும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.3.37கோடி மதிப்பிலான இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகள் வழங்கப்படவுள்ளது.

அதன்படி இன்று மதுக்கரை வட்டம், மலுமிச்சம்பட்டியில் உள்ள துணை சுகாதார நிலையத்தில் மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகள் வழங்கும் திட்டம் தமிழ்நாட்டில் முதல்முறையாக இங்கு தொடங்கி வைக்கப்பட்டு, பயிற்சி கையேடு, மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த சுகாதார நிலையத்தில் மாரடைப்புக்கான முன்னெச்சரிக்கை தடுப்பு மருந்துகள் எப்படி வழங்குவது என்ற பயிற்சியினை செவிலியர்கள் வாயிலாக செய்து காண்பிக்கப்பட்டது.

ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடம் 30 செவிலியர் பயிற்சி கல்லூரிகள் தமிழ்நாட்டிற்கு வேண்டும் என கோரியிருந்தோம். ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 11 செவிலியர் பயிற்சி கல்லூரிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். அதன்படி, 11 புதிய செவிலியர் பயிற்சி கல்லூரிகள் தொடங்கப்படவுள்ளது. ஒரு கல்லூரிக்கு 100 வீதம் மொத்தம் 1100 மாணக்கர்கள் அரசு செவிலியர் பயிற்சி கல்லூரியில் பயிலும் வாய்ப்பை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், தேசிய நல்வாழ்வுக் குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்த குமார், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மோ.ஷர்மிளா, மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மருத்துவக்கல்வி இயக்குநர் திருமதி.சாந்திமலர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடக்கம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்கும் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| ஜூன் | 29 – வேலூர் | – வேலூர் மாவட்டம் |
| ஜூலை | 1 – புனலூர் | – கேரள மாநிலம் |
| | 2 – பாவூர் சத்திரம் | – தென்காசி தெற்கு மாவட்டம் |
| | 3 காலை திருநெல்வேலி | – திருநெல்வேலி மத்திய மாவட்டம் |
| | மாலை புளிங்குடி | – தென்காசி வடக்கு மாவட்டம் |
| | 4 மேலூர் | – மதுரை தெற்கு மாவட்டம் |
| | 5 திருச்சி மேற்கு | – திருச்சி மத்திய மாவட்டம் |
| | 6 பட்டுக்கோட்டை | – தஞ்சை தெற்கு மாவட்டம் |
| | 7 காலை அம்மாபேட்டை – திருமணம் | – தஞ்சை வடக்கு |
| | மாலை புதுக்கோட்டை பொதுக்கூட்டம் | – புதுக்கோட்டை வடக்கு |



மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியம் திருமுல்லைவாசல் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் சுகாதாரத் துறையின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், சீர்காழி நகர்மன்றத் தலைவர் துர்காபரமேஸ்வரி, ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயபிரகாஷ், மகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# கும்மிடிப்பூண்டி கி.வேணு இல்லத் திருமண விழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! ஆவடி சா.மு.நாசர் - டி.ஜெ.கோவிந்தராஜன் - திருத்தணி எஸ்.சந்திரன் வரவேற்புரை!

திருவள்ளூர், ஜூன் 29-

கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி கி.வேணு -பத்மாவதி வேணு இல்ல திருமண விழா திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம் கி.வே. செந்தில்குமார் - விதுபாலா செந்தில்குமார் ஆகியோர் மகள் செ.அஸ்வினி திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம் கவரப்பேட்டை ச.கணபதி - ரத்னஸ்ரீ கணபதி ஆகியோர் மகன் க.பிரவின்குமார் திருமண விழா கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று ( 29.6.2023 வியாழக்கிழமை) காலை 9 மணி அளவில் சென்னை தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.



இதில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார். கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ., டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

கழக பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி, கனிமொழி கருணாநிதி எம்.பி. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி எம்.பி., கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர்கள் தயாநிதிமாறன் எம்.பி., எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழகத் துணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, முன்னாள் அமைச்சர் க.சுந்தரம், சொத்து பாதுகாப்பு உறுப்பினர் இ.ஏ.பி. சிவாஜி, ஆதிதிராவிட அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில அணிகளின் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர்க் கழகச் செயலாளர், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய குழு பெருந்தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூர் கழக தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே. ஆனந்த்குமார், வைஷ்ணவி ஆனந்தகுமார், எஸ்.கோபாலகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மணிகண்டன்,தமிழரசி மணிகண்டன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கிறார்கள்.

## புதுக்கோட்டை மாவட்டம் ஒலியமங்கலம் கிராமத்தில்

# மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்

புதுக்கோட்டை ஜூன் 29 -

புதுக்கோட்டை மாவட்டம். பொன்னமராவதி ஒன்றியம், ஒலியமங்கலம் கிராமத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ சிகிச்சை முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி 27.06.2023 அன்று துவக்கி வைத்து, காட்சிப்படுத்தப்பட்டுள்ள கால்நடை உணவு வகைகளை பார்வையிட்டு, சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, கால்நடைக்கான தீவனப் பயிர்களை கால்நடை வளர்ப்போரிடம் வழங்கினார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஓராண்டு முழுவதும் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், பொன்னமராவதி ஒன்றியம், ஒலியமங்கலம் கிராமத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கால்நடை பராமரிப்புத்துறை, பால்வளத்துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும், மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் அனைவரும் தங்களது கால்நடைகளுக்கு வழங்க வேண்டிய சத்தான உணவு வகைகள், தாது உப்பு கலவை உள்ளிட்டவைகளை இம்முகாமில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள உணவு வகைகளை அறிந்து கொண்டு தங்களது கால்நடைகளுக்கு வழங்க வேண்டும். மேலும் குறைந்த செலவில் கோழி வளர்ப்பு திட்டத்திற்காக மறவாமதுரை, இடையாத்தூர், ஒலியமங்கலம் ஆகிய 3 இடத்திலிருந்து 100 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஒலியமங்கலத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருந்தகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கான தடுப்பூசிகள், சத்தான உணவுகளை முறையாக வழங்க வேண்டும்.

இந்த முகாமில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தல், குடற்புழுநீக்கம் செய்தல், நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சினை சரிபார்ப்பு, கோழி தடுப்பூசிகள், வெறி நோய் தடுப்பூசிகள் தீவன வளர்ப்பு, சிறு அறுவை சிகிச்சைகள், வகைப்படுத்தப்பட்ட பெண் கன்று உற்பத்திக்கான விந்தணு பிரித்தறிதல், புல்வளர்ப்பு, தாது உப்பு கலவை மற்றும் கருப்பை மருத்துவ உதவி போன்ற நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு வழங்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்பில் உண்டாகும் பல்வேறு சந்தேகங்களுக்கு முகாம்களில் பங்கேற்கும் மண்டல இணை இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர்கள், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழக பேராசிரியர் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் ஆகியோர் பதில் அளிப்பார்கள்.

எனவே கால்நடை வளர்ப்போர் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இது போன்ற கால்நடை மருத்துவ சிகிச்சை முகாமில் தங்களது கால்நடைகளுக்கு சிகிச்சைகள் அளித்து பயன் பெற வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இம்முகாமில், மண்டல இணை இயக்குநர் (கூ.பொ.) மருத்துவர் எஸ்.எஸ். அரசு, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பொது மேலாளர் (ஆவின்) எஸ்.தங்கமணி, மண்டல ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம் பேராசிரியர் மற்றும் தலைவர் மருத்துவர் பூ.புவராஜன், உதவி இயக்குநர் (காய) மருத்துவர் ஆர். பாபு, ஊராட்சிமன்றத் தலைவர்கள் சி.சோலையம்மாள் சிவக்குமார் (ஒலியமங்கலம்) முருகேசன் (மேலத்தானியம்), ஒன்றியக்குழு உறுப்பினர் வி.சிவரஞ்சனி வினோத்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் சக்கரை ஆ.சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜெ.ஜெயக்குமார் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை : 600 018
நாள்: 27.06.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி அரசு மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, வருவாய் கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.நமச்சிவாயம், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. மகேஸ்வரி சண்முகநாதன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.முகமது இந்தியாஸ், வட்டாட்சியர் (ச.பா.தி.) திருமதி.பரணி, ஊராட்சிமன்றத் தலைவர் திருமதி.ராஜமனோகரி ரவி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.